**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 94/2019 |
| Name | : Mohammed Faizer |
| P.W. | : 6 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலை அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.05.2019 ம் தேதி மதியம் 12.35 மணிக்கு உடுமலை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது கணியூர் காவல் நிலைய குற்ற எண். 87/2019 ச/பி 279, 304(ஏ) இதச என்ற வழக்கில் இறந்து போன கருப்பையா என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய மடத்துக்குளம் வட்ட காவல் ஆய்வாளர் தலைமை காவலர் 1104 ராஜ சிவபிரகாசம் என்பவர் மூலம் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று கருப்பையா என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தேன். அவர் உடலில் விரைப்புத் தன்மை மற்றும் காணப்பட்ட காயங்கள் குறித்து பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். பிரேத பரிசோதனை அறிக்கையில் கருப்பையா இறப்பானது தலை காயத்தால் ஏற்பட்ட ரத்த இழப்பு மற்றும் அதிர்ச்சியினால் ஏற்பட்டது என்று எனது கருத்துடன் கூடிய பிரேத பரிசோதனை சான்று வழங்கினேன். **22.05.2019 தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது

சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/−M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்